**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A.75/2017**
**E.P.91/1997**
**அசல் வழக்கு எண்.193/1996**

**2019 ஆண்டு பிப்ரவரி மாதம் 21 ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேஷ்வரன் | வயது | 48 |
| த.பெ. | காமாட்சி | மதம் | |
| முகவரி | | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர் திருப்பூர் தெற்கு |

**முதல் விசாரணை**

**நான் இந்த வழக்கில் மனுதரர் தரப்பு 27ம் சாட்சி (PW27)(21.02.2019)**

இம்மனுவில் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள க.ச.எண்.481/3 சம்மந்தப்பட்ட பட்டா பாஸ் புக் தொடர்பான ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை, ஆகையால் மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள க.ச.எண்.481/3 பசலி 1380 முதல் பசலி 1422 வரையிலான சான்றிட்ட அடங்கல் கணக்கை நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். க.ச.எண்.481/3 பசலி 1380 முதல் பசலி 1422 வரையிலான சான்றிட்ட அடங்கல் கணக்கு சாட்சி சான்றாவணம் X9. பசலி 1381 முதல் பசலி 1383 வரை என்ன பயிரிடப்பட்டது என்றால் ஆவணங்களின் படி சோளம் பயிரிடப்பட்டதாக குறிப்பு உள்ளது, அதற்கு பின்னிட்ட பசலி ஆண்டுகளில் பயிரிடப்பட்டதாக குறிப்பு இல்லை. பசலி 1380 முதல் பசலி 1396 வரை முனியன் பட்டாத்தாரராக குறிப்பிடப்பட்டுள்ளார். பசலி 1397 முதல் பசலி 1399 வரை முருகேசன் பட்டாத்தாரராக குறிப்பிடப்பட்டுள்ளார். பசலி 1401 முதல் பசலி 1422 வரை நத்தம் நிலமாக குறிப்பிடப்பட்டுள்ளது. பசலி 1384ல்

என்ன பயிரிடப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களின் படி மேற்படி ஆண்டில் குறிப்பு எதுவும் கிடையாது. பசலி 1384க்கு பின்னிட்டு விவசாயம் செய்யப்பட்டதா என்றால் ஆவணங்களின் படி விவசாயம் செய்யப்பட்டதாக குறிப்பு இல்லை. **(வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**